89

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
2006
PERADENIYA UNIVERSITY

விலை சதம் -/25

# காந்தீயம்

மலர் 17 | (காந்தி ஆண்டு 110) 1980 சனவரி—பெப்ரவரி | இதழ் 4-5

அநீதியை எதிர்த்துப் போராடத் தயங்குகிறவன் உண்மையான ஜன நாயகவாதி அல்ல; சத்தியாக்கிரகம் – சுதந்திர மனிதனின் பிறப்புரிமை. அரசாங்கத்திற்கு அடங்கி நடப்பது ஜன நாயகமல்ல; அரசாங்கம் தவறு செய்யுமானால்–குற்றம் புரியுமானால் – அதாவது லஞ்ச ஊழல் தாண்டவமாடினால் மக்கள் அச்சமின்றி அந்த ஆட்சியை எதிர்த்து நின்று சுதந்திரமாக நடந்து கொள்ளும் சக்தி படைத்தவர்களாக இருந்தால் தான் உண்மையான ஜன நாயகம் அங்கே நிலவுவதாகச் சொல்லலாம்.

—மகாத்மா காந்தி

## சர்வோதயம் பற்றி குன்றக்குடி அடிகளார்

காந்தியடிகளின் புரட்சி இளவெயில் போல; பொதிகை மலைத் தென்றல் போல. என்றாலும் அது வலிமையும் உறுதியுமுடையதாகவிளங்கியது.


காந்தியடிகள் தலைசிறந்த ஞானி. அறியாமை கலப்பில்லாத தூய அறிவிற்குத் தான் ஞானம் என்று பெயர், அது பேரொளியனையது.

காந்தியடிகள் பழைய பண்புகளுக்கும் நிகழவிருக்கும் புதுமைப்பண்பிற்கும் ஓர் இணைப்புப் பாலத்தை ஏற்படுத்தினார். கங்கையும் யமுனையும் கலப்பது போல பழமைக்கும் - புதுமைக்கும் இடையே வேறுபாடு தெரியாத விழுமிய ஒற்றுமையை உருவாக்கினார். புதியதொரு சமுதாயத்தை உண்டாக்கினார்.

எதையும் எப்படியும் செய்யலாம் என்று காந்தியடிகள் கருதியதில்லை. வாழ்க்கையின் இலட்சியம் உயர்ந்ததாக இருக்கவேண்டும். அந்த இலட்சியத்தை டையும் வழிமுறையும் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பது காந்தியடிகளின் விழுமிய கொள்கை.

புதிய சமுதாய அமைப்புப் பற்றி அவர் கனவு கண்டார் என்று கூறுவதைவிட, எதிர்கால புதிய சமுதாயத்தை அவர் தரிசனம் செய்தார் என்று கூறுவதே சாலப் பொருத்தமானது. ஏனெனில் கனவுகள் நிறைவேறாமல் போவதும் உண்டல்லவா?

இன்று நம்மை நாமே ஆத்ம சோதனை நடத்திக்கொள்ளும் நிலைக்கு நாம் வந்திருக்கிறோம், இந்த நாட்டின் சமுதாய வரலாற்றில் காந்தியடிகளின் சித்தாந்தம் முழுக்க முழுக்கப் பொருந்தும். அதுதான் சர்வோதயம். எப்படி உதயம் இயல்பாகவே ஏற்படுகிறதோ அது போல சமுதாயத்தில் எல்லோரும் வாழுகின்ற ஒரு நல்ல அமைப்பு முறை இயல்பாகவே தானாகவே உருவாகவேண்டும். அப்படித்தன்னியல்பாக வளர்வதுதான் சர்வோதயம்.



'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' என்ற தாயுமானாரின் சித்தாந்தம் சர்வோதயத்தின் முழுச் சித்தாந்தம் என்று கூறலாம்.

'தனியொருவனுக்கு உணவில்லையெனில் சகத்தினை யழித்திடுவோம்' என்று பாரதியார் பாடினார். அந்தத் தனியொருவன் யாராக இருக்கமுடியும்? உரிமைகளைக் கேட்கவாயற்று, தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வழியும் வலிமையும் அற்று மூலையிலே ஒதுக்கப்பட்டுக் கிடக்கின்ற ஒருவனைப் பற்றித் தான் பாரதியார் பேசுகிறார். அத்தகைய ஒருவனை நோக்கிச் சோறும் துணியும் போகும்படி செய்வது தான் சர்வோதயம்.

95 பேரின் வாழ்க்கை உரிமைகளையும் அவர்களிடத்து உரமும் உறுதியும் இல்லையென்ற காரணத்தால் எஞ்சியுள்ள 5 பேர் பறித்துச் சுகவாழ்வு வாழ்கிறார்களே! இந்நிலை இருக்கலாமா?

மனித சமுதாயத்தில் எந்த ஒரு கோடியில் வறுமை இருந்தாலும் அது நம்மை அரித்துத்தின்று விடும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் எதற்கும் கும்பிடுபோட மிக நன்றாகக்கற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் எதைக்கும் கும்பிடுகிறோமோ அதனுடைய தத்துவத்தை மட்டும் வாழ்க்கையில் காப்பாற்றமாட்டோம். புறக் காட்சிகளையும் புறத்தத்துவங்களையும் பார்த்து அவற்றை நம்முடைய வாழ்க்கையில் மேற்கொள்ளவேண்டும்.

காந்தியடிகளின் நினைவாக நாம் சத்தியம் செய்து உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும். அவர் வலியுறுத்தி

(3ஆம் பக்கம் பார்க்க)

★ காந்தீய சர்வோதய தத்துவ வெளியீடு ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தீயம்
காந்தி ஆண்டு 110
1980 சனவரி — பெப்ரவரி

# உண்மையான பக்தி வேண்டும்

காந்தியடிகள் உயிர் நீத்த தினம்(சனவரி 30ஆம் திகதி) சர்வோதய தினமாகவும் தியாகிகள் தினமாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

காந்தியடிகளை அவ்வப்போது மனத்தால் நினைவுபடுத்திக்கொண்டால் மட்டும் போதாது. அவரது கொள்கைகளைச் செயலிலும் பின்பற்றவேண்டும். காந்தியடிகள் மீது உண்மையான பக்தி நமக்கு இருக்குமானால் அவரது இலட்சியங்களைச் செயல்படுத்துவதில் உண்மையுணர்வுடன் ஈடு படவேண்டும்.

இப்போதெல்லாம் காந்தியடிகளைப் பற்றிப் பேசுவது ஒரு வழக்கமான சம்பிரதாயமாகிவிட்டது. அவர் காட்டிய பாதையைப் பின்பற்றும் உறுதியில்லாமல் அவரைப் பற்றிப் பேசுவதில் பொருளே இல்லை. காந்தியடிகள் தமது கொள்கைகளுக்காகவே உயிர் வாழ்ந்தார். தனது உயிரையும் கொள்கைக்காகவே தியாகம் செய்தார் என்பதை எல்லாரும் நினைவிற் கொள்ளவேண்டும். சர்வோதய தினமும் தியாகிகள் தினமும் இதை நினைவுறுத்திக்கொள்ளும் நாள்.

தேசிய ஒருமைப்பாடு, மனித சகோதரத்துவம் போன்ற இலட்சியங்களை அடைய காந்தியடிகள் எவ்வளவு மகத்தான தியாகங்களைச் செய்தார் என்பது எல்லாருக்கும் தெரியும்.

பல்வேறு சமூகங்களிடையே சமத்துவம் நிலவவேண்டும்; மனிதர்கள் எல்லாரும் சமம்; ஏற்றத் தாழ்வு கிடையாது என்று காந்தியடிகள் போதித்தார். ஆனால் காந்தியடிகளின் செயலுக்கும் சொல்லுக்கும் மாறாக முற்றிலும் வேறுபட்ட நிலையை இன்று நாம் காண்கிறோம்.

தரித்திர நாராயணர்களின் சேவையிலேயே காந்தியடிகள் தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். பெரும்பான்மையினர் வறுமைக் கோட்டுக்கும் கீழே உழன்றுகொண்டிருக்கிறார்கள். இந்த மக்கள் எத்தனை காலம்தான் பொறுத்திருப்பார்கள். நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவிடவேண்டுமென்று காந்தியடிகள் விரும்பினார். ஆனால் இன்றோ மேல்நிலையில் வசதியாக இருப்போர் மற்றவர்களைச் சுரண்டி வாழ்கிறார்கள். இனியும் இந்த அநீதி நீடிக்க அனுமதிக்கக்கூடாது. ஏனெனில் அநீதியை எதிர்த்து அமைதியாகவும் அகிம்சா பூர்வமாகவும் போராடவேண்டுமென காந்தியடிகள் நமக்குக் கற்றுத் தந்துள்ளார். காந்தியடிகளின் இந்த ஆயுதத்தைக் கொண்டு போராடுவது காந்தியவாதிகளின் பொறுப்பாகும்.

# இலண்டன் தபால்

ஒக்ரோபர் (1979) காந்திய இதழில், 'காந்தி நிலையத்தை' தகுந்த முறையில் இயங்கச் செய்வதற்காக முயற்சிப்பதை அறிந்தேன். என் இதயம் நிறைந்த நன்றி.

பழைய பண்பாட்டில் ஊறி வளர்ந்த கஸ்தூரி பாயைத் தன்னுடைய சத்திய சோதனையிற் பங்குகொள்ளச் செய்து அனைவரும் போற்றும் அன்னை கஸ்தூரிபாயாக அறிமுகஞ் செய்துவைத்த அண்ணல் மகாத்மா போல, சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடில்லாமல் வாழக்கூடிய சூழலில் வாழ முடியாதிருந்த போதும் 'காந்திநிலைய' வளர்ச்சிக்கு எனது பங்கையும் செலுத்த வேண்டுமென்ற ஆசையினால் சில ஆலோசனைகளை எழுதுகிறேன்.

(1) இங்கு வாழும் இந்தியர்-இலங்கையர் வெப்ப வலயக் காய்கனிகளுக்கு ஆபிரிக்காவிலுள்ள கெனியாவையும் மேற்கிந்திய தீவுகளையும் எதிர்பார்த்து வாழ்கின்றனர். அக்காய்கனிகளின் தரத்தையும் இலங்கையில் சிறப்பாக வட பகுதியில் கிடைக்கும் காய்கனிகளின் தரத்தையும் ஒத்துப்பார்க்க வேண்டிய அவசியமில்லை. மண்ணைப்பொன்னாக்கும் மகிமை வடபகுதிக் காய்கனிகளுக்கு உண்டு.

'இலமென்றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்'

இக்குறளின் பொருளைச் செயல் மூலம் உணரக்கூடிய முறையில் நிலைய மாணவருக்கும் பயிர் வளர்ச்சியில் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களின் உடலையும் உள்ளத்தையும் வளர்க்கலாம்; எதிர்காலத்தில் சர்வோதய சமுதாயத்தைக் கட்டிக் காக்கும் பொறுப்பையும் ஏற்பார்கள்.

(2) வள்ளுவர், பாரதியார், மகாத்மா, விநோபா போன்ற பெரியார்கள் கூறிய அறிவுரைகளில் சில வற்றை யாவது 'காந்திநிலைய' மாணவர்களின் உள்ளத்திற் பதியச் செய்வதன் மூலம் உள்ளத்தை உயர்வடையச் செய்து உயர்ந்த வாழ்வு வாழ உதவலாம்.

''இலர் பலராகிய காரணம் நோற்பார்
சிலர், பலர் நோலாதவர்''

''உற்றநோய் நோன்றல் உயிர்க்கு
உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்குரு''

மேற்கூறிய குறள்களிற் கூறப்பட்டிருப்பவை ''முற்றுந் துறந்த முனிவர்களுக்காகக் கூறப்பட்டவை, சாதாரண வாழ்வு வாழ விரும்புகின்ற எங்களுக்கு இயலாதவை'' என்ற எண்ணம் நிலைய மாணவர்கள் மனதில் எழாத வகையில் வாழ்க்கையில் உண்டாகும் துன்பங்களைச் சகிப்புத் தன்மையுடன் பொறுத்துக்கொள்ளுதல், பிறர்க்கு எவ் வகையிலும் துன்பம் விளைவிக்காமல் வாழுதல் என்பதை வாழ்வின் குறிக்கோளாகக் கொள்ள பயிர்ச் செய்கையில் பயிற்சி அளிப்பதன் மூலம் உதவலாம், தமக்கும்–பிறர்க்கும் பயன் தரும் முறையில் வாழ விவசாயப் பயிற்சி உதவும் என நம்புகிறேன்.

(இலண்டனிலிருந்து இக் கடிதத்தை அனுப்பியிருக்கும் சகோதரி தமது பெயரை வெளியிட விரும்பவில்லை
ஆ-ர்)

# காந்தி நிலைய விசாரணைக்குழு அறிக்கை

கிளிநொச்சி — உருத்திரபுரத்தில் அகில இலங்கை காந்தி சேவா சங்க ஆதரவில் நடைபெற்று வரும் காந்தி நிலையத்தை புனரமைத்து சிறப்பாக நடத்துவதற்கான திட்டத்தை வழங்குவதற்காக நியமிக்கப்பெற்ற சிவஞானம் ஆணைக்குழு தமது அறிக்கையை காந்தி சேவா சங்க பொதுச் செயலாளர் திரு. கா. விஸ்வலிங்கம் அவர்களிடம் கையளித்துள்ளது. இவ்வறிக்கை பற்றி விரைவில் நிர்வாக சபை ஆலோசிக்கும்.

★ சர்வோதய நற் சமுதாயத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினோபாஜி மீண்டும் யாத்திரை தொடங்கலாம்

பவனார் ஆசிரமத்தில் நவம்பர் மாதம் நடந்த 'ஆசார்யகுல்'ன் சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றிய போது உலக அமைதிக்கு சாந்தி சேனையைத் திரட்ட தேவையானால் மீண்டும் யாத்திரையைத் துவங்க தயாராக இருப்பதாக வினோபாஜி கூறினார்.

தேசிய மற்றும் சர்வதேசிய நிலைமைகளைப் பற்றித் தமது கருத்தை வெளியிட்டு வினோபாஜி மேலும் கூறியதாவது :- ''அமைதி வேண்டுமென்பதற்காக மக்கள் ஒவ்வொன்றையும் பிரித்துக் கொண்டே செல்கிறார்கள். கொரியா இரண்டாகப் பிரிக்கப்பட்டது. வியட்னாமும் ஜெர்மனியும் பிரிக்கப்பட்டன. பர்லின் நகரத்தையும் இரண்டாகப் பிரித்து மத்தியில் சுவரையும் எழுப்பியிருக்கிறார்கள். இந்தியாவிலும் வங்காளம், காஷ்மீர் பஞ்சாப் பிரிவினை செய்யப் பட்டன. அரசியல் கட்சிகளும் பிரிவினைப் பணியில் ஈடுபட்டுள்ளன. இந்த நிலைமையில் ஆசார்யர்களைத்தவிர வேறு யாரால் இணைக்கும் பணியை மேற்கொள்ள முடியும். ஜாதி, மதம், இனம், மொழி, மாநிலம் ஆகிய எல்லாவற்றின் முடிவே சர்வோதயம் என்று நான் கூறினேன். ஆனால் இவற்றின் மீது ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே பொய்யான பற்றுதல் இருக்கிறது. இந்த பொய்யான பற்று தலைக் கைவிடுமாறு மக்களிடம் 'ஆசார்யகுல்' அங்கத்தினர்கள் கூறவேண்டும்.

இந்தியாவில் பண்டைக்காலத்திலிருந்தே அகிம்சை, சத்தியம் முதலிய விரதங்கள் ஆன்மீக முன்னேற்றத்திற்கு அவசியமானவை எனக் கருதப் பட்டு வந்தன. ஆனால் காந்திஜியோ நடைமுறை வாழ்க்கையில் முன்னேறவும் இவைகள் தேவைதான் என்று கூறினார்.

ஐரோப்பிய நாட்டினர் சென்ற 10 அல்லது 15 ஆண்டுகளாக ஒன்றாகச் சேர்ந்து செயல் படுவது பற்றிப் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். நானோ நாடுகளை மட்டுமல்லாது உலக அமைப்புப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறேன். ஐ. நா. சபை ஒரு உலக அமைப்பு. அதுவும் அமைதிக்காக ஆயுதம் தரித்த இராணுவத்தை வைத்திருக்கிறது. அதைத்தவிர ருசியா, அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய நாடுகளும் இராணுவத்தை வைத்துக் கொண்டுள்ளன. இது போன்ற இராணுவங்களுக்குப் பதிலாக அமைதி ராணுவத்தை (சாந்தி சேனையை) வைத்துக்கொள்ளுமாறு நான் ஆலோசனை கூறினேன். உலகின் மக்கள் தொகை 400 கோடி 'இதில் 60 கோடிமக்கள் இந்தியர். எனவே ஐ. நா. சபைக்குத் தேவையான சாந்தி சேனையின் ஏழில் ஒரு பகுதியை இந்தியர் அளிக்கும். இதற்கான பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அதற்காக யாத்திரை செய்ய வேண்டி நேரிட்டால் இப்போதும் கூட பாபா யாத்திரையை மேற்கொள்வார்.''

## ஜெயப்பிரகாஷ் விஜயம் பற்றி ஒரு விளக்கம்

மக்கள் நாயகர் ஜெயப் பிரகாஷ் நாராயண் சிறப்பிதழாக வெளிவந்த 'காந்தீயம்' கிடைத்தது; நலம். அவர் இலங்கைக்கு 1969 தை மாதம் வருகை தந்து யாழ். மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்தபோது காந்தி சேவா சங்கம், காந்தி நூற்றாண்டுவிழாக்குழு ஆகியவை ஒழுங்கு செய்த வரவேற்புகள் பற்றியும் நிகழ்ச்சிகள் பற்றியும் குறிப்பிடப்படவில்லை. 1969 சனவரி மாதம் காந்தி நிலையம், கஸ்தூரிபாய் இல்லம், காந்திக்கிராமம் ஆகியவைகளுக்கு வருகை தந்தார். யாழ்ப்பாணத்தில் அரசாங்க விருந்தினராக இருந்தார். இங்கு வீரசிங்க மண்டபம், யாழ் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் கல்லூரி, மகாஜன கல்லூரி, நெல்லியடி மகா வித்தியாலயம், யாழ் நகரசபையில் பெண்கள் மகாநாடு ஆகிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றினார். இவர் இலங்கைக்கு வந்ததும் யாழ்ப்பாணம் வந்ததும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகக் கருத வேண்டும்.

ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் எம்மிடம் பெரும் பொறுப்பை விட்டுச் சென்றுள்ளார். காந்தி வழிநின்று அவரது கொள்கையைப் பரப்புவது எமது தலையாய கடமையாகும்.

—பேராசிரியர் கு. நேசையா

## சர்வோதயம் பற்றி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்த தத்துவங்களை – சித்தாந்தங்களை நாம் கொஞ்சம் கொஞ்சமாகவாவது வாழ்க்கையில் மேற்கொள்ளும் முயற்சியில் வெற்றிபெற வேண்டும்.

சமயவாதி என்றால் நல்ல மணமுள்ள மலர் போல் இருக்கவேண்டும். மலரின்மணத்தினாலாயஇன்பஅனுபவம் மனிதர்களுக்கேயாம் – மலர்களுக்கல்ல. மலர் இருக்கும் செடி அனுபவிப்பது மலருக்கு அருவருப்பூட்டும் உரத்தைத்தான் - ரோஜா மலர் வண்ணத்தால் மணத்தால் பலருக்கு விருந்தளிக்கிறது. அது போலவே மனிதனும் காட்சியாலும் செயலாலும் மற்றவர்களுக்கு இன்பம் அளிக்கவேண்டும். அது மனிதனின் கடமை. இதனை நமக்கு உணர்த்துவது தான் சர்வோதயம்.

நாம் பூரண சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டுமென்றால், சர்வோதய தத்துவங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதுதவிரவேறுவழியில்லை. சமுதாய ரீதியாக - கால ரீதியாக-அரசியல ரீதியாக அமைந்த அற்புதமான ஓர் விளக்கு சர்வோதயம். விளக்கைச் செய்து கொள்ள முடியாதவர்களாக நாம் இருக்கலாம். விளக்கைச் செய்து கொடுதத பிறகு அந்த விளக்கை ஏற்றி இருளைப் போக்கி விளக்கொளியில் வாழ முடியாதவர்களாக இருச்கலாமா ?

காந்தியடிகளுக்குப் பிறகு வினோபாஜி சர்வோதய இயக்கத்தின் தலைவராக விளங்குகிறார். இந்த 20 ஆம் நூற்றாண்டிலேயே வினோபாஜி நம்மிடையே வாழுகின்ற காலத்திலேயே காந்தியடிகள் காண விரும்பிய சர்வோதய சமுதாயத்தை - புதிய சமுதாயத்தைக் காண வேண்டும் என்ற முயற்சியில் நாம் ஈடுபடவேண்டும். நாமனைவரும் ஓரணியில் சேர்ந்து அண்ணல் காந்தியடிகளுக்குக் காணிக்கையாக அவரது சித்தாந்தங்களை ஆண்டுக்கு ஒன்று வீதமாகவாவது எடுத்துக் கொண்டு நடை முறைக்குக் கொணர முயற்சிக்க வேண்டும்.

**நிர்மாணம் செய நித்தமும் உழைப்போம் ✶**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தி மலர்

கவியரசு: இளங்கம்பன்

கஸ்தூரி மணங் கமழக்
கருணையொளி வீசி நின்ற
காந்தி மலரே!
போர் பந்தரில் நீ பிறந்தாய்;
போர் பந்தமே இல்லாமல் சிறந்தாய்!

ஆடைக்கு நூல் நூற்கும்
ராட்டையை ஆயுதமாக்கி
பட்டினியைப் படையாக்கி,
நீ வெற்றி பெற்றதில் நாங்கள் இன்று
நம்ப முடியாத
உண்மையாகி விட்டாய்!

வெம்பகையை அன்புப் பண்ணில்
செயலிழக்க வைத்து
சமுதாய வீதியில்
சாந்திச் சுதிகூட்டிச்
சத்தியத்தின் குரல் கொடுத்த நீ
இந்த கலியுகத்தின்
கண்கண்ட வள்ளல் ஆனாய்,

ஆம்,

துண்டுக்கு உடலையும்
தொண்டுக்கு வாழ்வையும்
குறிவைத்த
குண்டுக்கு உயிரையும் கொடுத்தாய்
சாதனையின் சான்றே!
போதனையின் பொருளே!
சோதனையின் சுடரே!

எல்லோரையும் சமமாகவே
எண்ணிப் பழகிய நீ
உனக்குச் சமமாக ஒருவரும்
இல்லை என்பதை
காட்டும்
மனித இமயமாகி விட்டாய்!

நன்றி; சர்வோதயம்

## காந்தி சேவாசங்க ஆண்டுப் பொதுக்கூட்டம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் 1979ஆம் ஆண்டுக் கணக்குகளின் உள்ளக பரிசோதனை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இது விரைவில் முடிவடைந்ததும் பகிரங்க கணக்குப் பரிசோதனைக்கு அனுப்பி அறிக்கையைப் பெற்றுக்கொண்டதும் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தை 1980-05-31ஆம் திகதிக்கு முன் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு சாந்தி சேனைமண்டல்

விருதுநகர் ஆர். டி. பி. சுப்பிரமணியன், திருவாரூர் மு மாணிக்கம், சென்னை லோக்சேவக் சு. வீரப்பன், மதுரை பத்மா வரதன், தேரிருவேலி சாமி ஆகிய ஐவரும் தமிழ் நாடு சாந்தி சேனை மண்டலின் உறுப்பினராகக் கடமையாற்றுகின்றனர்.

இதன் தலைமை இடம் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சாந்தி ஆசிரமத்தில் அமைக் கப்பட்டுள்ளது. இங்கு சமுதாயாத்திலேற்படும் பிரச்சினைகளை அன்பு, அகிம்சை, சத்தியாக்கிரகம் முதலியவைகள் மூலம் தீர்த்து வைப்பது குறித்து ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

* * *

## ஆங்கிலத்தில் சர்வோதய செய்தி

வட இந்தியாவிலுள்ள வாரணாசியிலிருந்து சர்வோதய இயக்கச் செய்திகளை ஆங்கிலத்தில் பத்திரிகைகளுக்கும் மற்றும் நிர்மாண நிறுவனங்களுக்கும் அனுப்புவதற்கான பணி தொடங்கப்பட்டுள்ளது.

* * *

## தபால் மூலம் தலைவர்களின் வரலாறு போதனை

தமிழ் நாடு – திருவாரூர் காந்தி சமாதான நிறுவனம் உயர் நிலைப்பள்ளி மற்றும் மேல் நிலைப்பள்ளி மாணவர்களுக்கு தபால் மூலம் தலைவர்களைப் பற்றிய பாடங்களைப் போதிக்கத்திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தில் காந்தி அடிகள், கஸ்தூரிபாய், திலகர், ஜெயபிரகாஷ் நாராயண், கிருபளானி, ராஜாஜி, சுப்பிரமணிய பாரதி ஆகியோர் உட்பட 18 தலைவர்களின் வரலாறு இடம் பெறும்.

## அறிவிப்பு

'காந்தியம்' சம்பந்தமாகத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

நிர்வாகி,
காந்தியம்
½, 47ஆவது ஒழுங்கை: ஏ
கொழும்பு-6.
தொலைபேசி: 83579

## காந்தியப் பொருளாதாரம்

பொருள்களின் உற்பத்தி மற்றும் விநியோகம் அனைத்தையும் அரசு கைக்குள் வைத்துக்கொண்டால் சர்வாதிகார அரசிற்கு இட்டுச் செல்லும். நான் தனிநபர் சுயமாகத் தொழில் செய்வதை வரவேற்கிறேன். அதே சமயம் சமுதாயத்தில் அதனைக் கட்டுக்குள் வைக்க அதே நேரத்தில் சமுதாயத்தில் அவர்களுக்கு இருக்கும் பொறுப்பை உணர்த்தும் அளவிற்கு அரசு நடந்துகொள்ள வேண்டும். அது தான் காந்தியப் பொருளாதாரத்தின் கரு என நான் நினைக்கிறேன்.

காந்திஜி இயந்திரங்களை விரும்பவில்லை. மனிதனை அடக்கி ஆளும் எந்த அமைப்பையும் அவர் விரும்பவில்லை. மாறாக அமைப்புகளையும், இயந்திரங்களையும் மனிதன் ஆள விரும்பினார்.

—ஜெயப்பிரகாஷ்நாராயண்

## சர்வோதயத்தின் நான்கு தூண்கள்

1. இம்சையில் நம்பிக்கை இருக்கும் வரை உலகத்தின் காரியங்கள் முடிவடைவதில்லை நேறமாட்டா;
2. கட்சி அரசியலில் நம்பிக்கை கொண்டு அதன்படி செய்யப்படும் ஏற்பாடு நிலைக்காது;
3. நிலத்தில் தனியார் உடைமை நிலைக்காது; நிலமும் செல்வமும் எல்லோருக்குமே பொதுவாயிருக்க வேண்டும். எல்லோரும் சேர்ந்து பாடுபட்டு உள்ள பொருளை எல்லோரும் சேர்ந்தே அனுபவிக்க வேண்டும்;
4. சாதி வேற்றுமை, மதவேற்றுமை ஆகியவை கூடாது.

## காந்திய — சர்வோதய உறுதிமொழிகள்

அமைதி காப்போம்.
அன்பு பரப்புவோம்.
சகிப்பு வளர்ப்போம்.
சமத்துவம் பேணுவோம்.
பிறர் பொருள் நாடோம்.
பிணக்கின்றி வாழ்வோம்.
உழைப்பை மதிப்போம்.
உண்மை போற்றுவோம்.
எளிமை ஏற்போம்.
ஏழ்மை அகற்றுவோம்.
புலன் வழிச்செல்லோம்.
புண்படப் பேசோம்.
வாழவே உண்போம்.
வரம்புடன் வாழ்வோம்.
பணிவை அணிவோம்.
பண்பு பெருக்குவோம்.

இப்பத்திரிகை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக விவேகானந்தர் மேடு, கொழும்பு - 13 சங்கர் சன்ஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
இலங்கையில் புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org